**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**

**தொழிற்கல்வி பிரிவு**

**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்**

# வெற்றிடங்கள்

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, தொழிற்கல்வி பிரிவுடன் இணைந்த இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தில் நிரந்தர அடிப்படையில் பின்வரும் வெற்றிடத்திற்கான ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01. தலைமை பொறியியலாளர் (உற்பத்தி, சேவைகள் மற்றும் பராமரிப்பு) – (HM 1-1)

**தகைமைகள் -**

**வெளிவாரி -**

(A) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்டோமொபைல்/ இயந்திரவியல் அல்லது மின் பொறியியல் துறையில் பட்டம் ஒன்று அத்துடன் தொடர்புடைய துறையில் பட்டப் பின்படிப்பு தகைமை (முதுமாணி) ஒன்று அல்லது பதவியின் தொடர்புடைய விடயப்பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய நிறுவனம் ஒன்றின் அங்கத்துவம் மற்றும் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் ''முகாமைத்துவ தரம்'' ஒன்றில் குறைந்தது பதினைந்து (15) ஆண்டுகள் அனுபவம்.

அல்லது

(B) பதவிக்குத் தொடர்புடைய விடயப் பரப்பு ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் சக அங்கத்துவம் மற்றும் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் ''முகாமைத்துவ தரம்'' ஒன்றில் குறைந்தது பதினைந்து (15) ஆண்டுகள் அனுபவம்.

உள்ளக -

(A) வெளிவாரி அபேட்சகர்களுக்குத் தேவையான தகைமைகளைப் பெற்றிருத்தல்

அல்லது

(B) பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் முகாமைத்துவ (MM) பிரிவு தரம் 1 பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு –** 2025/01 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைய HM 1-1 ரூபா 140,640 - 4100 x 15 - 202,140/-
(மேலதிகமாக, அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்.)

**ஆட்சேர்ப்பு முறை –** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தேர்வு

**வயது வரம்பு –** விண்ணப்ப இறுதித் திகதிக்கு 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**பதவி நிலையின் பொது நிபந்தனைகள்**

- இலங்கை பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.
- நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பதவிக்கு வழங்கப்படும் பணிகளை சிறந்த முறையிலும் மேற்கொள்வதற்கும் உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.
- இந்தப் பிரிவுக்காக வெளிவாரியாக பணியாளர் நியமிக்கப்படும்போது மூன்று ஆண்டுகள் தகுதிகாண் காலத்தைக் கொண்டதாக அமையும். மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் அவரது செயல்திறன் மற்றும் நடத்தை திருப்திகரமாக இருக்கும் பட்சத்தில் இந்தக் கால முடிவில் அவரது பதவி உறுதி செய்யப்படும். முந்தைய பதவியில் ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட உள்ளக அடிப்படையில் தெரிவு செய்யப்படும் பணியாளர் ஓர் ஆண்டு பதில் காலம் ஒன்றை கொண்டதாக அமையும்.
- மேலுள்ள பதவிக்காக ஆட்சேர்ப்பு ஆரம்ப சம்பளப் படியைக் கொண்டிருக்கும்.
- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர் சம்பளத்தின் 08% பங்களிப்பைச் செய்யும் அதேநேரம் நிறுவனம் 12% பங்களிப்பைச் செய்வதோடு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 03% பங்களிப்புச் செய்யும்.

விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுக்கு பின்வரும் ஆவணங்களின் நிழல்பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

(a) பிறப்புச் சான்றிதழ்

(b) கல்வி மற்றும் தொழில்முறை தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்கள்

(c) சேவை அனுபவம் தொடர்பிலான சான்றிதழ்கள்

(d) தேசிய அடையாள அட்டை

அரச கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை மற்றும் அரச திணைக்களங்களின் பணியாளர்கள் குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் ஊடே தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்பதோடு விண்ணப்பதாரர் தேர்வு செய்யப்பட்டால் அவரை சேவையில் இருந்து விடுவிப்பது குறித்து நிறுவனத் தலைவர் உறுதி செய்தல் வேண்டும். தொடர்புடைய சான்றிதழ்களின் சுயமாக உறுதி செய்யப்பட்ட பிரதிகள், உறவினர் அல்லாத இரு நடுவர்களின் தொடர்பு விபரங்கள் மற்றும் விரிவான சுயவிபரக் கோவையுடனான விண்ணப்பங்களை முகாமையாளர் - நிர்வாகம் மற்றும் மனித வளம், இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம், இல. 582, காலி வீதி, கல்கிசை என்ற முகவரிக்கு 2025.06.19 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். முழுமை பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பங்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படும். இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கருத்தில்கொள்ளப்படமாட்டாது.

ஆட்சேர்ப்புகளுக்கு ஆதரவு திரட்டுவது தகைமை இழப்பு ஒன்றாக அமையும்.

**பணிப்பாளர் - அதிபர், த.நி.அ.**
**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்,**
**இல. 582, காலி வீதி,**
**கல்கிசை.**